நீதிவான் நீதிமன்றம் - முல்லைத்தீவு.

கௌரவ நீதிவான் திரு.T.சரவணராஜா அவர்கள் முன்னிலையில்.

பதிவு-செல்வி.ச.துவாரகா

வழக்கு இல : AR/418/21

13.05.2021

# தடைக்கட்டளை

தடையுத்தரவு பிறப்பிக்கப்படும் நபர்களின் விபரம்:-

01. சத்தியசீலன் விமலேஸ்வரன்
02. கமலநாதன் விஜீந்தன்
03. துரைராசா ரவிகரன்
04. மரியசுரேஸ் ஈஸ்வரி
05. அன்ரன் ஜெகநாதன் பீற்றர்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவில் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் யுத்தத்தில் இறந்த நபர்களை நினைவு கூறும் முகமாக சம்மந்தப்பட்ட இடத்தில் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இலங்கைக்குள் 1979 இல 48 உடைய பயங்கரவாத தடைச்சட்ட பிரிவின் 2011.08.29ம் திகதி 1721/12 உடைய அதிவிசேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்ட தடை செய்யப்பட்ட இயக்கமாக L.T.T.E இயக்கத்தின் தலைவர்கள் உட்பட இறந்த உறுப்பினர்களை நினைவுகூறுவதலை 2021.05.16ம் திகதியிலிருந்து 2021.05.22 வரை இதனை நடத்தப்போவதாக தகவல் கிடைத்துள்ளதாக பொலிசார் அறிக்கை செய்துள்ளனர்.

இதுவரையும் கொரோனா நோய் இலங்கையில் காணப்படுகின்றது. அத்துடன் இந்நோயினால் 800க்கும் அதிகமானவர்கள் மரணமாகியும் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் நோயாளிகள் காணப்படுகின்ற சூழ்நிலையில்

அரசாங்கத்தினால் கூட்டங்கள் ஏதும் நடாத்த கூடாது என தடைசெய்யப்பட்டிருக்கும் போது இவ்வாறு கூட்டம் கூடுவது குற்றமாகும்.

இன்று இ.த.ச.கோவை பிரிவு 185, 264, 1977 இலக்கம் 56உடைய சிவில் மற்றும் அரசியல் அமைப்புச் சட்டம் 03(1) மற்றும் 3(2)(அ)(ஆ) பிரிவின் கீழும் 1979 இல 48 உடைய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் 1897ம் இலக்க 03உடைய தனிமைப்படுத்தல் மற்றும் நோய்கள் தடுப்புச் சட்டம் 02, 03 பிரிவின் கீழும் 2020.03.02ம் திகதி இல 2167/18, 2020.03.25 திகதி 2568/6 மற்றும் 2006.06.11இன் 7481 உடைய வர்த்தகமானியின் கீழும் இதனை மீறும் பட்சத்தில் அவர்கள் 2005 இல 12 கொண்ட தண்டப்பணம் அதிகரிக்கும் சட்டத்தின் திருத்திய 1897 இல 03 கொண்ட தனிமைப்படுத்தல் மற்றும் நோய்கள் தடுப்புச் சட்டம் 04பிரிவுடன் வாசிக்கப்படும் 05(1) பிரிவின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகும்.

இதன்படி முள்ளிவாய்க்கால் பகுதியில் யுத்தத்தால் மரணமாணவர்களை நினைவுகூற அமைக்கப்பட்ட விளக்கேற்றல் தூவியிலோ அல்லது முல்லைத்தீவு பொலிஸ் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதியில் மேலே பெயர்குறித்த நபர்களும் மற்றும் அவர்களது உறுப்பினர்களுக்கும் 2021.05.16ம் திகதியிலிருந்து 2021.05.22ம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குள் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலோ தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புச் சட்டத்திற்கு முரணாகவோ நடாத்த கூடாது என்ற தடை உத்தரவினை 1979 இல 15 உடைய குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை பிரிவு 106(1)(3) பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட தற்துணிவின் பிரகாரம் விதிக்கின்றேன்.

நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

T.Saravanarajah
District Judge & Magistrate
District & Magistrate's Court
Mullaitivu.